RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt21212

OPEN ACCESS

# சிற்பியின் கவிதைகளில் அறிவியல் சிந்தனைகள்

**க. சிவமணி** [அ, *]

[அ] தமிழ்த்துறை & ஆய்வு மையம், அரசுக் கல்லூரி, சித்தூர், பாலக்காடு-678104, கேரளா, இந்தியா

# Scientific Thoughts in the Poems of Sirpi

**K. Sivamani** [a, *]

[a] Department of Tamil & Research Centre, Govt. College, Chittur, Palakkad-678104, Kerala, India

* Corresponding Author: sivamaniks2010@gmail.com

Received : 29-02-2021
Revised : 17-04-2021
Accepted : 24-04-2021
Published : 30-04-2021

Check for updates

**ABSTRACT**

Various poems of the Poet Sirpi have shown the tragedy of scientific discoveries being applied not to man's creative power but to destruction. The poet's view of the method of applying science is broad. It involves the methods that we should follow at any time. It also highlights the need to apply science to a prosperous life. During World War II, the United States carried out an atomic bomb attack on the Japanese cities of Hiroshima and Nagasaki, devastating the country. This poem by the Poet Sirpi illustrates that the impact of the atomic bomb attack has remained etched in the minds of not only the Japanese but also the people of the world to this day. It will emphasize the need to use science only for creative purposes.

**Keywords:** Poet Sirpi, Scientific Thoughts, Tragedy, Creativity

## முன்னுரை

அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனின் ஆக்க சக்திக்குப் பயன்படுத்தப்படாமல் அழிவிற்குப் பயன்படுத்தப்படுவதால் நேர்ந்த அவலத்தைக் கவிஞர் சிற்பியின் பல்வேறு கவிதைகள் எடுத்துக்காட்டியுள்ளன. அறிவியலைப் பயன்படுத்தும் முறைகுறித்த கவிஞரின் பார்வை விசாலமானது. எக்காலத்திலும் நாம் கடைப்பிடிக்க வேண்டிய வழி முறைகளை உள்ளடக்கியது. அத்துடன் வளமான வாழ்க்கைக்கு அறிவியலைப் பயன்படுத்துதலின் தேவையை எடுத்துரைப்பனவுமாகும்.

“கவிஞர் என்பவர் இலக்கியத்தோடு நின்று விடாமல் அறிவியல் அழிவுகளையும் அதனால் ஏற்படும் எதிர்காலச் சமுதாயத்தின் நிலையையும் எடுத்துக் காட்ட முடியும் என்பதை நிலைநிறுத்துகிறார் கவிஞர் சிற்பி” இரண்டாம் உலகப் போரின்போது அமெரிக்கா, ஜப்பான் நகரங்களான ஹிரோஷிமா, நாகசாகி ஆகிய நகரங்களின் மீது அணுகுண்டுத் தாக்குதலை நடத்தி நாட்டையே உருக்குலையச் செய்தது. அந்த அணுகுண்டு வீச்சின் தாகம் இன்றுவரை ஜப்பான் மட்டுமின்றி உலக மக்கள் அனைவரது மனங்களிலும் புரையோடிப் போனதைக் கவிஞர் சிற்பியின் இக்கவிதை எடுத்துரைக்கிறது. அறிவியலை ஆக்கத்திற்கு மட்டுமே பயன்படுத்தவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும்

## விரிகிறது இன்னும்

“விரிகிறது இன்னும்
ராட்சத நாய்க்குடைக்

காளான்" (Sirpi Balasubramaniam, 1996)

எனத் தொடங்கும் கவிதை, அறிவியலை அழிவுக் காரணங்களுக்காகப் பயன்படுத்தியதால் நேர்ந்த கடுமையான விளைவுகளைப் பட்டியலிட்டுச் செல்கிறது.

"இன்றைய உலக அரங்கில் வல்லரசுகளின் நடவடிக்கைகளிலும் அணு ஆயுதக் குறைப்பு முயற்சிகளிலும் சிற்பியின் எதிர்பார்ப்புகள் நிறைவேறி வருவதைக் கண்கூடாகப் பார்க்க முடிகிறது. சிற்பியின் உலகளாவிய விசாலமான, எதிர்காலம் குறித்த தொலைநோக்குப் பார்வையும் மனித குலத்தின் மேன்மை பற்றிய தீவிரமான ஈடுபாடும் அக்கறையும் இக்கவிதையில் வெளிப்படுகின்றன. சிற்பியின் கவிதைப் பயணத்தில் இது இன்னொரு வளர்ச்சி" என்ற அறிஞரின் கருத்து நோக்குதற்குரியதாகும்.

"மண் கதிரியக்க வளையத்தில் திணற

அண்டம் பிளந்தொரு கேள்விக்குறியாய்

எந்தாய் நிலத்து இதயத்து நடுவே

சின்ன மனிதரின் துரோகக் கத்தியாய்

திசைகள் கிழிக்கிற குரூர நகைப்புடன்

அசுர வேள்வியின் முளைத்த பிசாசாய்" (Sirpi Balasubramaniam, 1996)

என்று உலகில் ஆதிக்கம் செலுத்தும் வல்லரசு நாடுகளின் சோதனைக் கூடமாக அறிவியல் மாற்றப்பட்ட நிலையில் உலக நாடுகளுக்கிடையேயான நல்லுறவு கேள்விக்குறியாகும் அவலத்தை எடுத்துரைத்து சிந்திக்க வைக்கிறார் கவிஞர் சிற்பி.

"மனித குலத்தின் முன்னேற்றங்களுக்கு வரமாய் வாய்த்த விஞ்ஞானம் அதன் சாபக்கேடாக மாறத் தொடங்கிய கொடுமை இரண்டாம் உலகப் போரால் உலகுக்குத் தெரியலானது. அணுகுண்டு வெடிப்பால் நேர்ந்த மாபெரும் மனிதகுலச் சேதம் எல்லாரையும் சிந்திக்க வைத்தது" கதிரியக்கம் என்னும் நச்சு வளையத்துக்குள் சிக்கிக்கொண்டு திணறும் பூமிப்பந்தைக் காப்பாற்ற அறிவியலை ஆக்க சக்திகளுக்காகப் பயன்படுத்தல் ஒன்றே வழி என்பதைக் கவிஞர் முன்னிறுத்துகிறார். மேலும்,

"மலைக் கொப்புளங்கள் மாத்திரமிருக்க
மனிதரில்லாமல் நதிகள் குதிக்க
சூரியன் ஏதோ கடனுக்கு உதிக்க
சொறிநாய் பூமி என்று கிரகங்கள் சிரிக்க
அகில உயிர்க்குலம் மிதிபட்டக் கீறி
சகலமும் மலடாய் சாப்பறை கொட்டி" (Sirpi Balasubramaniam, 1996)

என இயற்கையின் மேனியில் காயங்களை ஏற்படுத்தியிருக்கும் அறிவியலின் செயலைக் கண்டு கவிஞர் மனம் கொதிக்கிறார். "கழுத்து அறுபடுவதற்கு முன் கழுத்தில் மாலைகள் ஏந்தும் பலியாடுகள் மாதிரி இந்த விஷ நாய்க்குடைக் காளான் விரிவது மண்ணிலும் விண்ணிலும் காற்றிலும் அல்ல. அறிவியல் தன்னை அலங்கரித்துக்கொள்வதற்காக அண்ட வெளிகளையே அலங்கோலப் படுத்திக் கொள்கிறது. அணு வெடிப்பு என்கிற அரக்கப் புன்னகைக்காக மானுட வரலாற்றையே கருக்கி வைத்துக்கொண்டு கருந்திலகம் இட்டுக்கொள்கிறது" என்ற அறிஞரின் கருத்து கவிஞர் சிற்பியின் கவிதை வரிகளோடு இணைத்துச் சிந்திக்கத்தக்கதாகும்.

## கதிர் வீச்சு

அணுக்கதிர் வீச்சினால் இந்நாள்வரை பூமிக்கு நேர்ந்த அவலங்களுக்கும் அழிவுகளுக்கும் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் எனத் தனது ஆசையை வெளிப்படுத்தும் கவிஞர்,

"ஆத்திரம் எங்களைப் பைத்தியம் ஆக்குமுன்

எங்கள் பாப்பாக்கள் நீலமாய்ப் பிறக்குமுன்

புல்லிதழில் விஷ முத்துகள் வியர்க்குமுன்

செல்வப் பசுமடியில் மரணம் சுரக்குமுன்

அரும்பு உதடு பிரிக்குமுன் பச்சை மண் முற்றத்தில்

கரிக்கோலமிடும் அணுக்குண்டர்களே!

விரிவது நிற்கட்டும்!

ராட்சத நாய்க்குடைக் காளான்" (Sirpi Balasubramaniam, 1996)

என்ற வரிகளில் அணுகுண்டு போன்ற மானுடத்தை அழியச் செய்யும் அறிவியல் தொழில்நுட்பக் கருவிகளுக்குத் தடை போட வேண்டும் என்ற நோக்கில் சில வேண்டுகோள்களை முன்வைக்கிறார். "அறிவியலின் விளைச்சல் வாழ்தலின் நலத்தை மேம்படுத்த வேண்டும். அறிவும் அறிவியலும் மானிடர் வாழ்தலை மண்ணின் மேலே உணர்த்துதல் வேண்டும். நலமாய், மகிழ்வாய், வளமாய்ச் சுரக்கும் ஊற்றுக்கண்களல்லவா திறப்பிக்கப்பட வேண்டும். உறவுகள் சங்கிலித் தொடராய் நீளுதல் அல்லவா அறிவின் விளைச்சல்? என்ன நடந்தது, எல்லாம் அழித்துச் சூரிய வெளியை சூனிய வெளியாய் வறுமையை ஆக்கும் வழியை அல்லவா திறந்தன?" இக்கவிதையில் அணு ஆற்றலை அழிவுக்குப் பயன்படுத்துதலை வன்மையாகக் கண்டிக்கும் கவிஞர் அணு சக்தியினை ஆக்க சக்தியின் பரிணாம வளர்ச்சிக்குப் பயன்படுத்தும் முயற்சிகளுக்கு ஆதரவுக் கரம் நீட்டுகிறார்.

## மனிதநேய உணர்வு

மனித வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் அறிவியல் தனது ஆதிக்கத்தைச் செலுத்தி வருதலை மறுப்பதற்கில்லை. அடுப்படியில் தொடங்கி அணு ஆயுதங்கள் வரை அனைத்துத் துறைகளிலும் இதன் ஆதிக்கம் அதிகரித்துள்ளமை கண்கூடு. ம்னித சமுதாயம் அறிவியல் கண்டுபிடிப்புகளின் துணையின்றி வாழ முடியாது என்ற நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறான். அறிவியலின் நோக்கம் குறித்து வாழ்வியல் களஞ்சியம்," அறிவியலின் நோக்கமே பல தீர்வுகளுக்கு ஆதாரமானவற்றைச் சேகரித்து அதன் அடிப்படையில் பொது விதிகளைக் கண்டுபிடித்துப் பிறகு ஒவ்வொரு துறைக்கும் செயல்படுத்துவதாகும்" கடந்த மூன்று நூற்றாண்டுகளுக்கும் மேலாக அறிவியல் புதுமைகள் உலகை வியப்பில் ஆழ்த்தி வருதலை மறுப்பதற்கில்லை (Sirpi Balasubramaniam, 2016).

அறிவியல் வளர்ச்சி கற்பனைக்கு எட்டாத உயரத்தில் வளர்ந்துகொண்டிருக்கிறது. அறிவியல் கருவிகள் மனித முன்னேற்றத்திற்குத் துணைபுரிவதாய் அமைதல் வேண்டும்." அறிவியல் வளர்ச்சி அவசியமானது. ஆனால், அதே நேரத்தில் மனித நேயத்தைஅழித்து விடக் கூடாது. மனிதநேயமற்ற வாழ்வில் மனிதன் ஈடுபடத் தொடங்கினால் மிருகத்தனமே மேலோங்கி அடுத்தவனை அழிக்கும் நிலை ஏற்பட்டு விடும். இதனால் மனிதகுலமே அழிந்துவிடும் நிலை உருவாகி விடும். எனவே எவ்வாறான கண்டுபிடிப்புகள், அதற்கான முயற்சிகள் இருந்தாலும் மனிதநேயம் என்ற பொருள் தேவையான அளவு கலந்திருக்க வேண்டும்" என்பார் கொளஞ்சி.

அறிவியலின் இயந்திரத்தனமான போக்குக்கு இடம் தராது மனிதநேய உணர்வுகளுக்கு மதிப்பளிப்பதையே காலந்தோறும் மானுடம் விரும்புகிறது என்பதை மனிதம் என்ற கவிதை எடுத்துக்காட்டியுள்ளது. "அறிவியலின் அழிவுக்கான கேடயம் ஆவது சமாதானம் என்னும் உணர்வுதான். அழிவுகளை அறிவும் அறிவியலும் கொண்டு வந்து விடக் கூடும். ஆனாலும் அன்பின் உணர்தல் தானே சமாதானம் கொண்டு வர இயலும்? இதய வெளிகளில் உயிர்க்கிற ஈரம் தானே அமைதிக்கான மேகங்களை இயக்க முடியும்? கவிஞர் சிற்பியின் அருமையான படிமம் இதை உள்வாங்கியுள்ளது" விஞ்ஞானிகளின் கட்டளைகளை இயந்திர மனிதன் நிறைவேற்றிக்கொண்டிருக்கும் வேளையில் விஞ்ஞானியின் மகள் குறித்த ஒரு செய்தி வருகிறது.

"அவசரச் செய்தி

விஞ்ஞானி விவேகன்

குழந்தை ஒளியரசி

தானே திறந்து தானே மூடும்

வாசல் கதவில்

பொம்மையை எடுக்கக்

குனியும் போது

சிக்கி நெரிந்து

சிதைந்து மரணமுற்றாள்" (Sirpi Balasubramaniam, 1996)

என்ற செய்தி விஞ்ஞானி விவேகனைத் தாக்குகிறது. விஞ்ஞானியின் உள்ளம் செய்தியைக் கேட்ட மாத்திரத்தில் அறிவு நிலையிலிருந்து உணர்ச்சி நிலைக்குத் திரும்பலாயிற்று. தன் குழந்தையைப் பறிகொடுத்த சோகம் தாளாமல் தவிக்கும் வேளையில், இயந்திர மனிதன் அடுத்த கட்டளையை நிறைவேற்றத் தயாராக இருப்பதாக சமிக்ஞை செய்கிறது. "அது இயந்திரம், மனிதன் அல்ல. மனிதன் உணர்ச்சியும் உயிரும் உள்ளவன். உணர்வுத் தன்மைகளால் இயங்குபவன். அவன் இயற்கையின் பரிணாம ரீதியான படைப்பு. இயந்திர மனிதன், மனிதனின் படைப்பு. மனிதன் தன் வாழ்க்கையை ஏதேனும் ஓர் உணர்வு நிலையில் வைத்தே வாழ்கிறவன். இயந்திர மனிதன் மின் சக்தியால் இயங்கும் மனிதனின் கண்டுபிடிப்பு." எனக் குறிப்பிடுதலைப் போல் அறிவியல் வளர்ச்சி மனிதாபிமானத்தைப் புதை குழியில் தள்ளுவதாய் மாறிவிட்ட சமூக அவலத்தைப் படம்பிடித்துக் காட்டும் கவிஞர் அறிவியல் துறையின் அபரிமிதமான வளர்ச்சி மனித உறவுகளின் புனிதத்தன் உருக்குலைக்காமல் இருக்க வேண்டியது இன்றியமையாதது என்பதை வலியுறுத்துகிறது.

நம் சமூகத்தில் போலியான ஆமிகமும் அறிவியலைப் பயன்படுத்துதலில் நாம் காட்டும் மெத்தனப்போக்கும் உலக மக்களைத் துன்புறுத்தும் செயல்களுக்குப் பயன்படுத்துதலாலும் நேரும் அவலங்கள் உலக உயிர்களின் பரிணாம வளர்ச்சியில்கூட பாதிப்புக்களை ஏற்படுத்தக் கூடும் (Sirpi Balasubramaniam, 2004).

உலக மக்களிடையே அக்கப்பூர்வமான சிந்தனைகள் வளரவும் தடைக்கல்லாக அமைந்துவிடும் பேராபத்தும் உண்டு. இச்சூழலில் சிற்பியின் கவிதைகள் முன்வைக்கும் செய்திகள் மேற்கண்ட ஆபத்துகள் நிகழா வண்ணம் உலகைக் காக்க நம் கையில் உள்ள அறிவியல் என்னும் ஆயுதத்தைப் பயன்படுத்துதலில் கவனமும் ஒருநிலையான செயல்பாடும் அவசியம் என்பதை முன்வைக்கின்றன.

## இயற்கை அழிவு

நாளடைவில் நாகரீக வளர்ச்சியும் அறிவியலின் ஆதிக்கமும் மனிக்தனைத் தனது இயல்பான வாழ்க்கை நெறிமுறைகளிருந்து வலுக்காட்டாயமாக விடுவித்துப் புது வாழ்க்கையை நோக்கி அடியெடுத்து வைத்திருக்கிற நிலையில் கவிஞரின் இக்கவிதை முக்கியத்துவம் பெறுகிறது.

"காடு கொன்று

நாடாக்கியவன்

இன்று இயந்திர நாகரிக

நெரிசலில்

தன்னை மறந்தான்

மனிதன் என்னும்

தன் நாமமும் கெட்டான்!

கரு முகில்களுக்கு

வரவேற்புப் பத்திரம்

வாசித்தளிக்க வேண்டிய பெருமரங்கள்

மரப் பேட்டைகளில்

மல்லாந்து கிடப்பதால்

கொண்டு வந்த சீதனங்கள்

தாய்வீட்டுக் கடலுக்கே

மீண்டும் தாரை வார்க்கப் படுகின்றன" (Sirpi Balasubramaniam, 1996)

என்ற ஓடையின் கனவாய் வரும் இக்கவிதை மரங்களைத் தனது ஆடம்பர வாழ்வுக்கு அச்சாரமாய் மனிதன் மாற்றிடத் துணிந்துவிட்ட தற்காலத்தில் வானிலிருந்து மழையைத் தேவையான தருணங்களில் வருவிக்கக் காரணமான மரங்களின் பெருக்கம் குறையத் தொடங்குகிறது. இதனால் மேகங்களை ஓரளவு நிலைபெறச் செய்து மழையை வருவிக்கும் செயல் மரங்களை அதிக அளவில் வெட்டி விடுவதால் நின்றுவிடவே மழையை மனிதன் பெறுவதில் தடைகள் அதிகரிக்கின்றன என்ற அறிவியல் செய்தியைத் தாங்கியதாகக் கவிஞரின் இக்கவிதை வரிகள் அமைந்துள்ளன.

## முடிவுரை

இவ்வாறு கவிஞர் சிற்பி முன்வைக்கும் அறிவியல் செய்திகளை உள்ளடக்கிய கவிதைகள் மானுட இனத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்குத் தடையாக அறிவியல் வளர்ச்சியும் அதைப் பயன்படுத்தும் மனித குலத்தின் செயலும் மாறிவிடக் கூடாது என்பதில் அதிக அக்கறை காட்டுவதாக அமைந்திருத்தல் சிந்தித்துச் செயல்படத் தூண்டுபவையாகும்.

## References

Sirpi Balasubramaniam (2004) Sirpiyin Padaippulakam, Ilakkiyath Thendral Padaippulakam, Coimbatore, India

Sirpi Balasubramaniam, (1996) Sirpiyin Kavithai Vaanam, Manivaasagar Pathippakam, Chennai.

Sirpi Balasubramaniam, (2016) Sirpiyin Katturaik Kalanjiyam, Vol II, Palaniyappa Brothers, Chennai.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License